விலைமனு கோரலுக்கான அழைப்பு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்தல்

விலைமனு இலக்கம : NTC/F&P/VEHICAL PURCHASE- 2026 - 91

01. 241, பார்க் வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு "இரண்டு (02) புத்தம் புதிய கலப்பு (Hybrid) மோட்டார் கார்கள், ஒரு (01) புத்தம் புதிய டபுள் கெப் மற்றும் மூன்று (03) புத்தம் புதிய வேன்களைக் கொள்வனவு செய்வதற்காக" தகுதியான விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்களக் கொள்வனவுக் குழுவின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைக் கோருகிறார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

விவரங்கள் பின்வருமாறு :

உருப்படி	விவரம்	அளவு	மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ரூ.	விலைமனுப் பிணைப் பெறுமதி ரூ.	விலைமனுப் பிணை செல்லுபடியாகும் திகதி
1	1400CC இற்கு மேற்பட்ட புத்தம் புதிய கலப்பு மோட்டார் கார்கள் (Brand New Hybrid Motor Cars above 1400CC)	02	12,500.00	600,000.00	03 மார்ச் 2027
2	2500CC இற்கு மேற்பட்ட புத்தம் புதிய வேன்கள் (Brand New Vans above 2500 CC)	03	12,500.00	900,000.00	
2	2500CC இற்கு மேற்பட்ட புத்தம் புதிய டபுள் கெப் (Brand New Double Cab above 2500 CC)	01	3,500.00	300,000.00	

02. தேசிய போட்டித்தன்மை வாய்ந்த விலைமனு நடைமுறையின் மூலம் விலைமனுக்கோரல் நடத்தப்படும்.

03. ஆர்வமுள்ள தகுதியான விலைமனுதாரர்கள் கொள்வனவுப் பிரிவில் (தொ.பே – 011-2503969) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் **2026 ஒக்டோபர் 12 முதல் 2026 நவம்பர் 02 வரை 0900 மணி முதல் 1500** மணி வரை 241, பார்க் வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கொள்வனவுப் பிரிவில் விலைமனு ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒவ்வொரு ஆவணத்திற்கும் **2026 ஒக்டோபர் 12 முதல் 2026 நவம்பர் 02 வரை 0900 மணி முதல் 1500** மணி வரை 241, பார்க் வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு (நிதி மற்றும் கொள்வனவு) எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான ஒவ்வொரு விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுப்பையும் கொள்வனவு செய்யலாம்.

05. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கூரியர் / பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரில் கையளிக்கப்படுவதன் மூலமாகவோ **2026 நவம்பர் 03 ஆம் திகதி 1400** மணிக்கு முன்னதாகவோ அல்லது அன்றோ இல. 241, பார்க் வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கொள்வனவுப் பிரிவில் உள்ள விலைமனுப் பெட்டியில் வைப்பிட வேண்டும். முத்திரையிடப்பட்ட விலைமனு உறையின் இடது கை மூலையில் **"புத்தம் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்தல்"** (Procurement of Brand-New Vehicles) என விலைமனுதாரர் குறிப்பிட வேண்டும்.

06. தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டவுடனேயே, விலைமனு திறப்பதில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்/விலைமனுதாரரின் பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

07. **2027 பெப்ரவரி 03** ஆம் திகதி வரை விலைமனுகள் செல்லுபடியாகும்.

08. அனைத்து விலைமனுகளுடனும் மேற்கூறியவாறு விலைமனுப் பிணை இணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வகைக்கும் தனித்தனி விலைமனுப் பிணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியொன்றினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவருக்கு சாதகமாக வழங்கப்படும் வங்கி உத்தரவாதத்தின் வடிவத்தில் விலைமனுப் பிணை அமைய வேண்டும்.

09. விலைமனுக்கு முற்பட்ட கூட்டம் **2026 ஒக்டோபர் 23 ஆம் திகதி 10.30** மணிக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கூட்ட அறையில் நடைபெறும்.

10. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ, மற்றும் விலைமனு நடைமுறையைத் திருத்துவதற்கும், ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு உரிமை உண்டு, இதனால் விலைமனுதாரர்களுக்கு எவ்வித பொறுப்பும் ஏற்படாது.

தலைவர்,
திணைக்களக் கொள்வனவுக் குழு,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
241, பார்க் வீதி,
கொழும்பு 05